பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.00

சுடர்: 6 பிரமோதூத ஹூ தை ீ 15 உ. திங்கட்கிழமை (28-01-1991) UTHAYAN - A LIVELY TAMIL NATIONAL DAILY கதிர்: 62

# மன்னாரில் ஹெலி வீழ்த்தப்பட்டது!

## தள்ளாடிப் பகுதியில் சம்பவம்

லண்டன், ஜனவரி 28

மன்னாரில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் ஹெலிக் கொப்டர் ஒன்று வீழ்த்தப்பட்டது.

விடுதலைப் புலிகளின் லண்டன் அலுவலகம் விடுத்த அறிக்கையில் இதுபற்றி தெரிவிக்கப்பட்டிருப்பதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

மன்னார் மாவட்டத்தில் பொதுமக்கள் வாழும் பகுதிகள் மீதும், பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த இலக்குகள் மீதும் அரசின் யுத்த விமானங்கள் நடத்திய தாக்குதல்களைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் பதில் தாக்குதல்கள் நடத்தினர் என்றும்—

அப்போது ஹெலிகொப்டர் ஒன்று தீப்பற்றி எரிந்த நிலையில் தள்ளாடி இராணுவ முகாமின் உள்ளே சென்றது என்றும் —

விடுதலைப் புலிகளின் அறிக்கையை மேற்கோள் காட்டி, ஏ. எவ். பி. செய்தி ஸ்தாபனம் தெரிவித்தது.

நாவற்குளம் கிராமத்திலேயே ஹெலிக்கொப்டர் சுடப்பட்டதாக மற்றொரு செய்தி தெரிவித்தது.

ஆனால், அப்படி ஹெலிக்கொப்டர் ஒன்றை தாம் இழக்கவில்லை என்று இராணுவம் கூறியதாக வெரித்தாஸ்வானொலி தெரிவித்தது.

# சுக்லா இன்று கொழும்பு வருகை

கொழும்பு, ஜன. 28

இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. வித்தியா சரண் சுக்லா மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டு இன்று மாலை கொழும்பு வருகிறார்.

வளைகுடா யுத்த நிறுத்த முயற்சிகளை முடித்துக் கொண்டு நேற்று புதுடில்லி திரும்பிய அவர் இன்று கொழும்பு செல்வார் என அறிவிக்கப்பட்டது.

அமைச்சர் சுக்லா ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸா, பிரதமர் மற்றும் அமைச்சர்கள் ரஞ்சன்விஜேரத்னா, தொண்டமான், ஏ. சி. எஸ் ஹமீத் ஆகியோருடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவார்.

முன்னாள் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவையும் அவர் சந்தித்துப் பேசுவார். எதிர்க் கட்சிகளை சேர்ந்த பிரமுகர்களையும் அவர் சந்திப்பார்.

வடக்கு-கிழக்கு நிலைமை தமிழர் பிரச்சினை, நட்புறவு ஒப்பந்தம், இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக பொருளாதார உறவுகள் குறித்து அமைச்சர் பிரதானமாகப் பேசுவார் என்று விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

அமைச்சர் சுக்லாவுடன் ஆறு பேர் கொண்ட தூதுக்குழு ஒன்றும் விசேட விமானத்தில் கொழும்பு வருகிறது. [அ-எ]

# பேச்சுக்கு புலிகள் முன் வந்ததை பயன்படுத்த அரசுக்கு வற்புறுத்து!

## பேச்சுக்களின் போது சுக்லா தெரிவிப்பார்

இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தைகள் மூலமே நிரந்தரத் தீர்வு ஒன்றைக் காண முடியும் என்று அமைச்சர் சுக்லா இலங்கை அரசுத் தலைவர்களுடன் நடத்தும் பேச்சுக்களின்போது வலியுறுத்துவார்.

— இப்படி புதுடில்லி உத்தியோக வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது.

பேச்சுக்களை நடத்துவதற்கு விடுதலைப் புலிகள் இயக்கம் முன்வந்துள்ளதை இலங்கை அரசு பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்றும் இலங்கை அரசிடம் அமைச்சர் சுக்லா வற்புறுத்துவார் என்று தெரிவிக்கப்பட்டது.

கொழும்புப் பேச்சுக்களுக்கு வரையறுக்கப்பட்ட நிகழ்ச்சிநிரல் எதுவும் தயாரிக்கப்படவில்லை என்றும் —

இரு தரப்பினரும் மனம் திறந்து சகல விஷயங்கள் குறித்தும் பேச்சுக்கள் நடத்துவர் என்றும் புதுடில்லி அரசு வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-எ)

# மன்னார், வவுனியா டிப்போக்களை வ.பி.போ.சவிலிருந்து பிரிக்க முயற்சி?

யாழ்ப்பாணம், ஜன. 28

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் கீழ் இயங்கும் வவுனியா, மன்னார் டிப்போக்களைச் சபையிலிருந்து தனியாக பிரிக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சந்தேகிக்கப்படுகின்றது.

கோண்டாவிலில் உள்ள சபையின் தலைமையகத்துக்கு எந்தவித தகவலும் தெரிவிக்காமலேயே வவுனியா, மன்னார் டிப்போக்கள் பஸ் சேவைகளை நடத்தி வருகின்றன.

சபையின் ஏனைய டிப்போக்களை சேர்ந்த ஊழியர்களுக்கு கடந்த நான்கு மாதங்களாக சம்பளம் வழங்கப்படவில்லை.

ஆனால் வவுனியா, மன்னார் டிப்போக்களைச் சேர்ந்த ஊழியர்களுக்கு சம்பள முற்பணம் வழங்கப்பட்டுள்ளது. மிகுதிச் சம்பளத்தை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

தற்போது இயங்கி வரும் இந்த இரு டிப்போக்களையும் — வ. பி. போ. சவிலிருந்து பிரித்து - வடமத்திய போக்குவரத்துச் சபையுடன் இணைக்க முயற்சி மேற்கொள்ளப்படுவதாகச் சந்தேகிக்கப்படுகிறது. [உ-8-6]

## நகரை வட்டமிட்ட விமானம்

நேற்று மாலை 4.30 மணியளவில் கரிய 'அவ்ரோ' விமானம் ஒன்று யாழ் நகரைக் - குறிப்பாகக் கோட்டையைச் - சுற்றி இரு தடவைகள் தாழப் பறந்து வட்டமிட்டுச் சென்றது.

நகரப் பகுதி மக்களும் [illegible] ரமடைந்தனர். (உ-51)

## இளம் பெண் காயம்

யாழ்ப்பாணம், ஜன. 28

நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் கொண்டமானாறு பகுதியில் ஹெலிக்கொப்டர் ஒன்று நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் இளம்பெண் ஒருவர் காயமுற்றார்.

சங்கக்கடையில் பொருள் வாங்குவதற்காக நின்ற சின்னத்தம்பி விஜயகுமாரி (வயது 18) என்பவரே காயமுற்றவராவார். (உ)

## வீடுகள் எரிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 28

கடந்த வியாழனன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் 36 ஆம் கிராம இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய படையினர் 39 ஆம் கிராமம் ஆறாம் வட்டாரத்தில் ஏழு வீடுகளை எரித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## அபகரிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 28

மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிக்குடியில் அகதிகளுக்கு வழங்கவென சங்கக் கடைஒன்றுக்கு வந்த 20மூடை சீனியை அப்பகுதியில் இருந்த ரெலோவினர் பலவந்தமாக எடுத்து விற்றுப் பணமாக்கியதாகக் கூறப்பட்டது. (உ)

## வங்கிக்கு ரூ. $2\frac{1}{2}$ கோடி வருகிறது

யாழ்ப்பாணம், ஜன. 28

இன்று பருத்தித்துறைக்கு வந்து சேரும் "லங்காகிரி" கப்பலில் இலங்கை வங்கிக்கு இரண்டு கோடி 50 லட்சம் ரூபா பணம் கொண்டுவரப் படவிருக்கிறது.

அந்தப்பணத்தில் ஒருபகுதி கூட்டுத்தாபனங்கள் மற்றும் திணைக்களங்களுக்கு பருத்தித்துறையில் வைத்தே வழங்கப்படும்.

மீதிப் பணம் வங்கிக்கிளைகள் மூலம் ஓய்வூதியக் கொடுப்பனவாக வழங்கப்படும். (உ-3)

## டயர் போட்டு எரிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 28

கடந்த 20 ஆம் திகதி அம்பாறை மாவட்டம் சென்ரல் காம்ப் பகுதியில் இரண்டு தமிழர்களை படையினர் டயர் போட்டு உயிருடன் எரித்துக் கொலை செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ)

## முச்சந்தி முரளி



அப்ப... அங்கை ஏவுகணை விட, இங்கை இவை புஸ்வாணம் விடுகினம் என்டு சொல்லுங்கோ......!

## ஈழத்தமிழர் கைது!

சென்னை, ஜன. 28

இலங்கைக்கு எரிபொருளைக் கடத்திச்செல்ல முயன்ற நான்கு ஈழத் தமிழர்களை தமிழ்நாடு பொலீஸார் நேற்றுக்காலை புதுக்கோட்டை, ஏனாதி கிராமத்தில் வைத்துக் கைது செய்தனர்.

அவர்களிடமிருந்த 2 ஆயிரத்து 600 லீற்றர் பெற்றோலையும் 200 லீற்றர் டீஸலையும் பொலீஸார் கைப்பற்றினர் என்று தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

## சட்ட நடவடிக்கை

கொழும்பு, ஜன. 28

தென்பகுதியில் ஜே. வி. பி நடவடிக்கை உச்சக்கட்டத்தில் இருந்தபோது அரசிடம் இருந்து பெற்ற ஆயுதங்களை, தற்போது திருப்பி ஒப்படைக்கத் தவறிய 4 ஆயிரம் அரசியல்வாதிகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாக அரசு அறிவித்துள்ளது.

இவர்களில் பலர் மாகாண சபை உறுப்பினர்களாகவும் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் தீவிர ஆதரவாளர்களாகவும் உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பெற்ற ஆயுதங்களை திருப்பி ஒப்படைக்க அரசு விதித்த காலக்கெடு சென்ற 25 ஆம் திகதியுடன் முடிவடைந்தது. [உ-எ]

## போராட்ட முஸ்தீபு

சென்னை, ஜன. 28

தமிழக தி. மு. க. அரசு பதவி நீக்கம் செய்யப்படும் வரை காங்கிரஸ்— அ. தி. மு. க. கூட்டணி தொடர்ந்து போராட்டங்களை நடத்தும்.

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி இவ்வாறு தெரிவித்தார்.

இதேசமயம்—

இவ்விரு கட்சிகளும் இன்று தமிழகத்தில் நடத்தும் வீதி மறியல் போராட்டத்தை ஒட்டி அரச பஸ் சேவைகளை நிறுத்துவது என்றும் பாடசாலைகள் மற்றும் கல்லூரிகளை மூடுவது என்றும் தமிழக அரசு தீர்மானித்து உள்ளது. [உ-எ]

## பெண்மணி சுட்டு கொலை

யாழ்ப்பாணம், ஜன. 28

மட்டக்களப்பு ஆரையம்பதி நகரில் ராஜி கமலாதேவி என்ற பெண் கடந்த புதன் இரவு இனந்தெரியாத இருவரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அவரிடமிருந்த நகைகளும் கொள்ளையடிக்கப்பட்டதாகத் தெரியவந்தது. [உ]

## அங்கு போர்; இங்கு பட்டாசு

கொழும்பு, ஜன. 28

வளைகுடாப்போர் ஆரம்பமான பின்னர் இஸ்ரேல் மீது ஈராக் ஏவுகணைத் தாக்குதல் நடத்திய செய்தி வெளியானபோது, களுத்துறை, காலி மாவட்டங்களில் முஸ்லிம்கள் வாழும் பகுதிகளில் பட்டாசு கொளுத்தி ஆரவாரம் செய்யப்பட்டது. [உ-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ஒரு பனை ஏழும், வீடு இருக்கும் வீடு, காணியும் உண்டு. தொடர்பு:- 07, கைலாசபிள்ளையார் கோவில் வீதி, நல்லூர்.

(15626)

### ரைப்பிங் சேவை

தமிழ்-ஆங்கிலம் (Stencils) ரைப்பிங் செய்து கொடுக்கப்படும். மற்றும் தமிழ் ஆங்கிலம் ரைப்பிங் வகுப்புக்கள் நடைபெறுகின்றது. Fudo, 39/17 மின்சார நிலைய வீதி, 3ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (பஸ் நிலையம் முன்பாக)

(சி/5564)

### சோதிட மாந்திரீக நிபுணர்

உங்கள் பிரச்சினை எதுவாயினும் உடனடியாகத் தீர்வு காண்பதற்கு மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரைக் கலந்தாலோசியுங்கள். "சக்தி சரவணா" 810, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம். (யாழ்ப்பாண இந்துக்கல்லூரி மைதானம் முன்பாக) தினசரி பகல் 9 மணி தொடக்கம் 5 மணி வரை சந்திக்கலாம். விடுமுறை நாள் வியாழன்.

(15597)

### தேவை

சுவிற்ஸ் ரோல் கேக் மிக்சர் தயாரிப்பதில் நன்கு அனுபவத் திறமை உள்ளவர்கள் நேரில் வரவும். ஹோட்டல் றொலக்ஸ் 340 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம். (15620)

### மில்க்வைற் திரவ சவர்க்காரம் (Liquid Soap)

வீட்டு சலவைக்குச் சிறந்தது. பாவனையாளர் வசதி கருதி கட்டைவேலி ப. நோ. கூ. சங்கத்திலும் விற்பனையாகிறது. மொத்தம் ரூ 90/- மட்டுமே.

(சி-5694)

### கம்பியூட்டர் கல்வி

Diploma in Data Processing and Computor Programming in Basic Language ஆரம்பம் 30-1-91 10 30 a m (திங்கள், புதன், வெள்ளி வகுப்புக்கள்) 27-1-91 10 30 a.m (சனி, ஞாயிறு வகுப்புக்கள்), Unikco Computer Centre 37 Clock Tower Road Jaffna. (வெலிங்டன் சந்திக்கு வடக்கே உள்ள கேள்மாடி)

(சி/5689)

### ஒப்செட் கலண்டர்கள்

கடவுள் படங்கள், குழந்தைகள் படங்கள், சினிமா படங்கள் கண்ணைக் கவரும் வர்ணங்களில் லித்தோவில் அச்சிடப்பட்ட மாதக் கலண்டர்கள் விற்பனையாகின்றன. (மீரா வெளியீட்டுகளும்) வியாபாரிகளுக்கு கழிவுண்டு. மல்லிகை புத்தகசாலை, பஸ் நிலையம் யாழ்ப்பாணம். ஸ்ரீகாந் புத்தகசாலை, நல்லூர்.

(15607)

### சித்ராலயா ஸ்ருடியோ

தரமான போட்டோஸ்ரற் பிரதிகளுக்கும், கறுப்பு, வெள்ளை புகைப்படங்களுக்கும் சித்திராலயா 351 கோவில் வீதி, நல்லூர். (நல்லூர் கோவில் பின் வீதியில், கம்பன் கோட்டத்திற்கு முன்பாக)

(சி/5681)

### கிளின்கட்

தமிழ், ஆங்கில ரைப்பிங், போட்டோக் கொப்பி வேலைகளுக்கும், அடையாள அட்டைகளை லமினேட் செய்வதற்கும், மற்றும் போட்டோஸ்ரற் பிரதிகளை உடனடியாகப் பெற்றுக் கொள்வதற்கும், கிளின்கட் 239 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(15592)

### தட்டெழுத்து நூல்கள்

13 புதிய தட்டெழுத்து பாவனையிலுள்ளது. தேர்ச்சி பெற்ற வரால் ஆக்கப்பட்டது. சிறந்தது, முழுமையானது, சகல பரீட்சைகளுக்கும் ஏற்றது. ஈடானது எங்குமில்லை பார்வையிடுங்கள் நிச்சயம் வாங்குவீர்கள் STCA 49 சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.

(15618)

### வானொலி நாடகங்கள்

வானொலி நாடகம் எழுதிப் பழக வேண்டுமா? வாசியுங்கள் 161 வானொலி நாடகங்களை எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் கெட்டிக்காரர்கள் 25/- முதலாம் பிள்ளை 30/- நாடகங்கள் பற்றிய விளக்கங்கள், விமர்சனங்களும் கொண்டவை.

(15630)

### டெயிலர் தேவை

ஆண்களுக்கான சேட், சாரம் சட்டை வெட்டி தைக்கக் கூடியவர் உடன் தேவை. சம்பளம் நேரில் பேசலாம் லக்கி டெயிலர்ஸ், 182, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

(15403)

### பிரத்தியேக வகுப்பு

G. C. E. A L பிரத்தியேக வகுப்புகள் வீடுகளுக்குச் சென்று எடுக்கப்படுகிறது. பொருளியல், கணக்கியல், வர்த்தகம், அளவையியல் பல்கலைக்கழக மாணவர்களால் கற்பிக்கப்படுகிறது. தொடர்பு: S. சிவா, 156, அரசடி வீதி, கந்தர்மடம்.

(15404)

### கைமாறப்பட்டது

004AB7763 இலக்கமுடைய Asia சைக்கிள் கைமாறப்பட்டுள்ளது. தயவு செய்து கைமாறி எடுக்கவர்கள் 361, K K S றோட்டிலுள்ள சந்தையடி - பொன்னம்பலம் கடையில் கொண்டு வந்து தந்து சைக்கிளை மாற்றி எடுக்கும்படி கேட்கப்படுகிறார்.

(15637)

### தவறிவிட்டது

கொழும்புத் துறையைச் சேர்ந்த செல்வி நா. கணபதிப்பிள்ளையின் தேசிய அடையாள அட்டை இல. 657693324V அலுவலக அடையாள அட்டை பர்சுடன் நல்லூர் கோவிலில் தவறிவிட்டது. எடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.

(15634)

### மிருதங்க வகுப்பு

தைப்பூச தினத்தில் 30 01 - 1991 புதன்கிழமை மிருதங்க வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. கற்க விரும்பும் மாணவர்கள் தொடர்பு கொள்ளவும். பின்பு வகுப்புக்கள் சனி, ஞாயிறு தினங்களில், காலையும், மாலையும் தகுதி வாய்ந்த ஆசிரியர்களால் நடத்தப்படும். விபரங்களுக்கு:- கோவிந்தபிள்ளை விஜயகுமார், 1 92/1 நாவலர் வீதி, (மிருதங்க தொழில் வகுப்பு நிலையம்) யாழ்ப்பாணம்.

15610)

### A/L இரசாயனம்

A/L 92 பொது இரசாயனம் ஆரம்பம் 29 - 01 - 91 செவ்வாய் 4.40 p. m. செவ்வாய், வியாழன் 4.40 p. m. ஆசிரியர் சதீஸ், 108, Brown Road, யாழ்ப்பாணம்.

(15640)

### விலங்கியல்

R ஈஸ்வரதாசன் B Sc (Cey ). பிரத்தியேக வகுப்பு ஆரம்பம்; 29-1 91 செவ்வாய் 92 A/L - இழையவியல், 91 A/L - பாகுபாடு 90A/L விசேட வினா விடை விபரங்கள் நேரில் இல 33 குமாரசாமி றோட், கந்தர்மடம் யாழ்ப்பாணம்.

(15639)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

### முழுநேரக் கல்விப் பட்டப் பின் டிப்ளோமா கற்கை நெறி 1989/90 விரிவுரைகள் ஆரம்பம்

அரசாங்க பாடசாலைகளிலும், தனியார் பாடசாலைகளிலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக்கான மேற்குறிப்பிட்ட கற்கை நெறிக்கான விரிவுரைகள் 1991-02 11 ஆம் திகதி ஆரம்பமாகும்.

அரசாங்க பாடசாலைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்டவர்களும் 199 -02 11 ஆம் திகதிக்கு முன் பதிவு செய்து விரிவுரைகளுக்குச் சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றார்கள்.

பதிவாளர்,

யாழ். பல்கலைக்கழகம்.

24 - 01 - 91

(சி 5691)


# மில்க்வைற் திரவ சவர்க்காரம் சகல தேவை அழுக்கு நீக்கி

**Milk White Liquid Soap**
**All - Purpose Dirt Remover**

சாதாரண வீட்டுச் சலவைக்குப் பாவிக்கும் முறை

1. ஒரு லீற்றர் நீரில் பத்து மேசைக்கரண்டி மில்க்வைற் திரவ சவர்க்காரத்தை ஊற்றவும்.
2. நுரை செறிந்த நீரைக் கலக்கவும்.
3. கலவையுள் ஈரத் துணியை அமிழ்த்திக் கலவையைத் துணியில் செறியச் செய்யவும்.
4. பத்து நிமிடத்தில் துணியைச் சுத்த நீரில் நன்றாக அலசி எடுக்கவும்.
5. சலவை செய்யும் துணிகளின் எண்ணிக்கைக்கும், பொலிவுக்கும் ஏற்ப அளவில் மாற்றஞ் செய்யவும்.

மில்க்வைற்

(சி-5695)


# சோமாலி ஜனாதிபதி தப்பி ஓட்டம்!

மொகடிஷூ, ஜன. 28 சோமாலி நாட்டின் ஜனாதிபதி திரு. பாரே தப்பி ஓடிவிட்டார் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது.

நான்கு வாரக் கிளர்ச்சியின் பின்னர் நாட்டின் ஆட்சியை ஐக்கிய சோமாலி காங்கிரஸ் கைப்பற்றியதாக சோமாலி வானொலி அறிவித்தது.

சோமாலி நேரப்படி சனிக்கிழமை இரவு 8-30 மணியளவில் ஐக்கிய சோமாலி காங்கிரஸ் ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக்கொண்டது.

(உ-எ)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## வல்லிபுரம் வேலாயுதம்

மண்ணுலகில்: 1907 - 07 - 18

விண்ணுலகில்: 1991 - 01 - 01

திதி: 1991 - 01 - 31

1991-01-02 அன்று நடைபெற்ற, தன் வாழ்நாள் முழுதும் எங்கள் அனைவரையும் வையத்துள் வாழ்வாங்கு வாழ வைத்தலையே தொழிலாகக் கொண்டு வாழ்ந்த, எங்கள் அன்புத் தெய்வத்தின் ஈமக்கிரியைகளில் கலந்து கொண்டும் மற்றும் அனுதாபச் செய்திகள் அனுப்பியும் தங்கள் அனுதாபங்களைத் தெரிவித்துக் கொண்ட அனைவருக்கும் எங்கள் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

1991 01-30 (புதன்கிழமை) அன்று செம்மணி மயானத்தில் நடைபெற இருக்கும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், மறுதினம் வியாழக்கிழமை அன்று கல்வியங்காடு, டச் வீதி இல்லத்தில் நடைபெற இருக்கும் மதியபோசன நிகழ்ச்சியிலும் கலந்து கொள்ளுமாறு உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சகோதரர்; சகோதரி, மருமக்கள் பேரப்பிள்ளைகள், பெறாமக்கள்.

டச் வீதி,
கல்வியங்காடு.

(15640)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இரத்தினம் இளையதம்பி

திருமதி இரத்தினம் இளையதம்பி காலமானார்.

இவர் குரும்பசிட்டி வவுணத்தம்பை றோட் இளையதம்பி (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், தயாபரி (ஆசிரியை தெல்லிப்பளை, யூனியன் கல்லூரி) தயாநிதி, தயாபரன் தயாரூபி தயாளன், ஆகியோரின் அருமைத் தாயாரும், தர்மரத்தினம் (தபாலதிபர், தெல்லிப்பளை) உதயகுமார் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், தொலைத்தொடர்புத் திணைக்களம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அருமை மாமியும், திவ்யன், கஸ்தூரி ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கட்டுடையில் 26-1-91 மாலை 5 மணியளவில் நடந்தேறியது.

கட்டுடை,
மானிப்பாய். (15636)

தகவல்:
கணவன்.

## பெனடிற் விக்ரர் பரஞ்சோதி

மல்லாகம் தேவாலய வீதியைச் சேர்ந்த பெனடிற் விக்ரர் பரஞ்சோதி (27-1-1991) காலமாகிவிட்டார்.

அன்னார் திருமதி பிரியதர்சினி பரஞ்சோதியின் (டுபாய்) அன்புக் கணவரும், ரவி சுவிற்றியின் அன்புத் தந்தையும், திருமதி திரேசம்மா பெனடிற் அவர்களின் சிரேஷ்ட புதல்வனும், இரத்தினசோதி (ஜேர்மனி), ஜெகசோதி (சவுதி), ஞானசோதி (கனடா) திருமதி யசிந்தா சேனாதிராசா, திருமதி ஜீபராணி மயில்வாகனம், அருள்சோதி (உ. விளைவுச் சேவை அதிகாரி, யாழ்ப்பாணம்), தேவசோதி, சத்தியசோதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் சேனாதிராசா, மயில்வாகனம் (ஆசிரியர் கட்டுவன்புலம் மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 28 01-1991 இல் பகல் 3 00 மணிக்கு புதுமைமாதா மல்லாகம் ஆலயத்தில் பூசைப் பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு குளமங்கால் சேமக்காலையில் நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்கப்படுகின்றனர்.

சேச் லேன்,
மல்லாகம்.

(15405)

தகவல்:
க. மயில்வாகனம்
(மைத்துனர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

## பின் நிற்பது ஏன்?

யாழ்ப்பாணம் வந்துள்ள கவிடிஷ் பேராசிரியர் பீற்றர் ஷோல்க வெளியிட்டுள்ள தகவல் எல்லோரது கவனத்தையும் ஈர்த்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான சமரசப் பேச்சு வார்த்தைகளை நடத்தி மத்தியஸ்தம் செய்வதற்கு நோர்வே, சுவீடின், நெதர்லாந்து ஆகிய ஸ்கன்டிநேவியன நாடுகளும், அவுஸ்திரேலியா, நியூசிலந்து ஆகிய நாடுகளும் விருப்பம் தெரிவித்துள்ளன. இது விடயத்தில் தாம் உதவத் தயாராக இருப்பதாக இலங்கை அரசாங்கத்துக்கு அவை தெரிவித்துள்ளன. ஆனால் கொழும்பு அரசாங்கம் இவற்றின் உதவியைப் பெற்றுக் கொள்வதில் நாட்டம் கொள்ளவில்லை; ஆர்வம் காட்டவில்லை; அக்கறை செலுத்தவில்லை. — இவ்வாறு பேராசிரியர் ஷோல்க தெரிவித்துள்ளார்.

யுத்தத்தை பிரகடனம் செய்த ஆரம்பத்தில், இனப்பிரச்சினை சம்பந்தமான பேச்சுவார்த்தை, புலிகளுடனான பேச்சுவார்த்தை, இனிமேல் சர்வதேச சமூகத்தின் கண்காணிப்பிலேயே நடத்தப்படும் என்று கொழும்பு அரசாங்கம் பகிரங்கமாக அறிவித்திருந்தது.

அந்த அறிவித்தலைத் தொடர்ந்தே மூன்றாம் நபர்களான வெளிநாடுகள் தமது மத்தியஸ்த உதவியை பணிதாபிமான ரீதியில் உதவ முன்வந்திருக்கின்றன.

இலங்கை அரசாங்கம் இது விடயத்தில் அக்கறை காட்டவில்லை என்றால் அதன் கபடத்தனங்களும், வேடம் போடுதலும் உறுதி செய்யப்படுகின்றன என்பதே பொருள்.

இனப்பிரச்சினையைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கவே - அரசியல் தீர்வு காணவே - விரும்புவதாக கொழும்பு அரசு கூறுவது தனி வசனம் வெறும் வேடமே. தமிழர்களை இன ஒழிப்புச் செய்து இந்நாட்டை ஒரு முழுச் சிங்களத் தீவாக்கிவிட வேண்டும் என்ற பேரினவாத இலட்சியத்தை அது மாற்றிக்கொள்ள விரும்பவில்லை என்பது ஒன்று.

தமிழர் பிரச்சினையை உள்நாட்டு விவகாரம் என்று கூறித் தானே கையாண்டு, தமிழ் மக்களின் உரிமைகளை பூரணமாக, நியாயபூர்வமாக வழங்காமல் தான் நினைத்த அற்ப சலுகைகளை வழங்கவே விரும்புகிறது. வெளியார் மத்தியஸ்தத்தை ஏற்றுக் கொண்டால் அது சாத்தியமாகாது என்பது இரண்டாவது.

தமிழர் பிரச்சினையை வெளிநாட்டு மத்தியஸ்தத்துடன் தீர்க்க உடன்பட்டால், அது சர்வதேசமயத் தன்மை பெற்றுவிடும். தமிழர்களின் உரிமைகள் நசுக்கப்படுவது பற்றிய உண்மை இலகுவில் முழுக்க முழுக்க உலகுக்குத் தெரிந்து விடும். அதன்பின் வெளி உலகத்தை ஏய்த்துப் பிழைத்துக் கடன் வாங்குவது கஷ்டமாகி விடும் என்பது மூன்றாவது.

இந்த மூன்று காரணங்களையும் முன் வைத்தே கொழும்பு அரசு வெளிநாட்டு மத்தியஸ்தத்தை ஏற்றுக் கொள்ளப் பின் நிற்கிறது. இதனை சம்பந்தப்பட்ட நாடுகள் புரிந்து கொள்ளுதல் அவசியம்.

தமிழர் பிரச்சினையைத் தீர்க்காத வரை, கொழும்பு அரசுக்கு உதவக் கூடாது என்று தமது நட்பு நாடுகள், அணி அமைப்பு நாடுகளுக்கு எடுத்துக் கூறி நெருக்குதல் கொடுக்க வேண்டும். அதன் மூலமே இந்நாட்டு அரசை வழிக்குக் கொண்டுவர முடியும்.

# யாழ். நாவலர் வீதி உடன் தார் இடப்படும்

யாழ்ப்பாணம், ஜன. 27

யாழ் மாநகர எல்லைக்குள் அமைந்துள்ள நாவலர் வீதி, கோவில் வீதி ஆகியவற்றை செப்பனிட்டு, புதிதாகத் தாரிடும் வேலைகள் இரு வாரங்களில் ஆரம்பமாகும்.

யாழ் மாநகரசபை வேலைப்பகுதி பொறியியலாளர் இதனைத் தெரிவித்தார்.

இவ்விரு வீதிகளும் தற்போது மோசமான நிலையில் இருப்பதால் இவற்றை முன்னுரிமை அடிப்படையில் திருத்த இருப்பதாக அவர் சொன்னார். [உ-6]

## சிப்பாய் பலி

கொழும்பு ஜன. 28

காங்கேசன்துறை இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய சினைப்பர் தாக்குதலில் இரு சிப்பாய்கள் உயிரிழந்தனர் என்று கொழும்பில் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-எ)

## இடமாற்றம்

வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள எட்டு மாவட்டங்களிலும் கடமையாற்றி வரும் கூட்டுறவு உதவி ஆணையாளர்களில் எட்டுக்கும் மேற்பட்டவர்களுக்கு உடனடி இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. (இ 6)

### 4 நாள் குண்டு வீச்சினால்

# வல்வை முத்துமாரியம்மன் கோவில் பலத்த சேதம்

வல்வெட்டித்துறை, ஜன 28

கடந்த 20 ஆம் திகதி தொடக்கம் நான்கு நாட்கள் தொடர்ச்சியாக ஸ்ரீலங்கா விமானப் படையின் குண்டு வீச்சு விமானங்களும், வை -12 சீசகடை விமானங்களும், அவ்ரோ பயணிகள் விமானங்களும் ஹெலிக்கொப்டர்களும் சேர்ந்து நடத்திய தாக்குதல்களை மேற்கொண்டதில், வல்வெட்டித்துறை முத்துமாரியம்மன் கோவிலும் முற்றாகவே சேதம் அடைந்தது.

நான்கு நாட்களிலும் சுமார் 20 குண்டுகள் வரை கோவிலுக்குள்ளும், கோவிலின் சுற்றாடலிலும் விழுந்து வெடித்தன.

இதில் தேர்க்கொட்டகை, மூன்று சித்திரத்தேர்கள், அன்னதான மடம், ஆலயத்தின் கூரைகள், வசந்த மண்டபம், சண்டேசுரர் ஆலயம், எழுந்தருளி வாகனங்கள், தேர் மடம், மின்சார இயந்திரம், மின் இணைப்புகள் யாவும் முற்றாகவே சேதம் அடைந்தன. ஆலயத்தை மீண்டும் பாலஸ்தாபனம் செய்து, கும்பாபிஷேகம் செய்வதற்கு மூன்று கோடி ரூபா செலவாகும் என மேற்படி ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவர் திரு வ. இ. நடனசிகாமணி தெரிவித்துள்ளார்.

தினமும் வல்வெட்டித்துறை, மற்றும் அயல் கிராமங்களில் இருந்தும் தினந்து வரும் பக்தர்கள் ஆலயத்தின் கோலத்தைக் கண்டு கண்ணீர் விட்டு அழுது கும்பிட்டுச் செல்வதைக் காணக் கூடியதாக இருக்கின்றது. (இ)

## புல்லாங்குழல் இசை நிகழ்ச்சி

யாழ்ப்பாணம் ஜன. 28

தைப்பூசத்தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 29 ஆம் திகதி மாலை 4-30 மணிக்கு நல்லூர் மனோன்மணி அம்மன் ஆலய மண்டபத்தில் செல்வி ஷர்மிளா புவனேசனின் புல்லாங்குழல் இசை நிகழ்ச்சி நடைபெறுகிறது. யாழோசை இசை மன்றத்தின் ஆதரவில் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ)

# பதிவுசெய்யாதகடைகள் மீது நடவடிக்கை!

யாழ்ப்பாணம், ஜன. 28

யாழ் மாநகரசபை எல்லைக்குள் இயங்கும் வர்த்தக ஸ்தாபனங்கள், தனியார் விற்பனை நிலையங்கள் யாவும் பெப்ரவரி மாத இறுதிக்கு முன்னர் மாநகர சபையிடம் பதிவு செய்து இயங்குவதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

பதிவு செய்யாத வியாபார நிலையங்கள் தொடர்ந்து வியாபாரத்தை மேற்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டா என்று மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன. [உ-6]

### லொறியில் வரும்

# பொருள்களை பரவலாக விநியோகிக்க யோசனை

யாழ்ப்பாணம், ஜன. 28

உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களைக் கொழும்பிலிருந்து கொண்டு வரும் லொறி உரிமையாளர்கள் நகரத்தில் மட்டும் அவற்றைச் சந்தைக்கு விடாமல் வெளியூர்களுக்கும் பரவலாக எடுத்துச் செல்ல வேண்டும்.

குடாநாட்டின் எல்லா உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும், லொறிகளில் வரும் பொருள்களை பரவலாக வியாபாரிகளுக்குக் கொடுக்க வேண்டும். அப்போதுதான் எல்லாப்பகுதி மக்களுக்கும் பொருள்கள் குறிப்பிட்ட அளவிலாவது போய்ச்சேரும்.

இவ்வாறு சமீபத்தில் நடைபெற்ற லாறி உரிமையாளர் சங்கக் கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

லொறிகளில் பொருள்களைக் கொண்டு வருவதில் உள்ள சிரமங்கள், லொறிகள் தாராளமாகப் போய்வர முடியாத நிலைமை என்பன குறித்தும் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

பொருள்களின் விலைகள் கண்டபடி உயராதிருக்கும் விதத்தில் லொறி உரிமையாளர்கள் தமது பணியை ஒரு சேவையாகக் கருதிச் செயலாற்ற வேண்டும் எனவும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. (அ)

# ஜே.வி.பி. சந்தேக நபர்கள் 300 பேர் தெற்கில் கைது

தென் பகுதியில் ஆடாவல்ல கிராமத்தை ஆயுதப் படையினர் சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்தினர்.

சுமார் 300 இளைஞர்களை விசாரணைக்காக அழைத்துக் கட்டிச் சென்றனர்.

ஜே.வி.பி. தீவிரவாதிகளை கைது செய்யும் நடவடிக்கை [illegible] இடம் பெறுவதாக [illegible] கூறுகிறது.

# தினமும் 1 லட்சம் பீப்பாய் எண்ணெய் கடலில்

குவைத் எண்ணெய் வயல்களில் இருந்து தினமும் ஒரு லட்சம் பீப்பாய் மசகு எண்ணெயை வளைகுடா கடலுக்குள் ஈராக் செலுத்திக் கொண்டிருப்பதாக, பன்னாட்டுப் படையினரை ஆதாரங் காட்டி பி.பி.சி. வானொலி அறிவித்தது.

இதனால் வளைகுடாக்கடலில் எண்ணெய் படர்ந்து பரவுவதாக அறிவிக்கப்படுகிறது.

48 கிலோ மீற்றர் அகலத்தில் இந்த எண்ணெய் பரவி வருவதாக ஒரு செய்தி தெரிவித்தது.

நூறு கிலோ மீற்றர் அகலத்தில் பரவி வருவதாக இன்னொரு செய்தி தெரிவித்தது.

வளைகுடாக்கடலில் கொட்டப்படும் இந்த எண்ணெய் தினமும் 20 கிலோ மீற்றர் வேகத்தில் அரபிக் கடலை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

# ஈராக் விமானங்கள் வெளியேற ஈரானிய அரசு அனுமதிக்காது

★ ஈரானில் தரையிறங்கிய ஈராக்கிய போர் விமானங்கள் வளைகுடாப் போர் முடிவடையும் வரை ஈரானில் இருந்து வெளியேற அனுமதிக்கப்பட மாட்டா என்ற உறுதிமொழியை அமெரிக்கா பெற்றுள்ளது.

ஈரான் அரசாங்கம் இந்த உறுதி மொழியை அளித்துள்ளதாக அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ் பேக்கர் தெரிவித்தார்.

ஈரானில் மொத்தமாக 80 ஈராக்கிய விமானங்கள் தரையிறங்கியுள்ளன என்றும் அவர் சொன்னார்.

ஈராக்கிய படைகளில் இருந்து வெளியேறிய ஈராக்கிய வீரர்கள் இவ்விமானங்களில் சென்று ஈரானில் தஞ்சமடைந்தனரா என்ற கேள்விக்கு திரு. பேக்கர் பதிலளிக்க மறுத்து விட்டார்.

இதனிடையில் - தரையிறங்கிய ஈராக்கிய போர் விமானங்களை திருப்பி அனுப்பி வைக்கும்படி பக்தாத் அரசாங்கம் ஈரானை கேட்டுள்ளதாக ஒரு செய்தி கூறியது.

இதே வேளை - வளைகுடா போரில் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரின் போர் விமானங்கள் ஈரானில் தரையிறங்கினால், அவை போர் முடிவடையும் வரை வெளியேற அனுமதிக்கப்படமாட்டாது என்று ஈரான் திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

# இஸ்ரவேல் மீது ஏவப்பட்ட ஏவுகணை வழி மறித்து அழிப்பு

சவூதி அரேபியா மற்றும் இஸ்ரவேல் மீதும் ஈராக் கடந்த சனிக்கிழமையும் 'ஸ்கட்' ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தியது.

இந்த ஏவுகணைகளை அமெரிக்காவின் 'பேட்ரியட்' ஏவுகணைகள் அழித்தன. உயிரிழப்புகள் ஏற்படவில்லை.

★ குவைத்தில் எண்ணெய் வயல்கள் எரிவதால் எழும் கரும்புகை மண்டலம் [illegible] கடலில் மசகு எண்ணெய் பரவி வருவதால் ஏற்படும் சுற்றுப்புறச் சூழல் பாதிப்பும், இந்திய உபகண்டத்தின் வானிலையில் பெருத்த மாற்றங்களை ஏற்படுத்தும் என்றும் அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எரியும் எண்ணெய் வயல்களில் இருந்து கிளம்பும் புகை மண்டலம் ஈரானை கடுமையாகப் பாதித்துள்ளது என்று கூறப்படுகிறது.

கடலில் எண்ணெய் பரவி வருவது, மேக்கூட்டங்கள் உருவாகுவதைத் தடுக்கும் என்று கருதப்படுகிறது.

இவை மழைவீழ்ச்சியை பாதிக்கும் அம்சங்களாக அமையலாம் என்று அஞ்சப்படுகிறது.

★ வளைகுடாவில் எண்ணெய் பரவி வருவதைத் தடுக்க எடுக்கப்பட வேண்டிய அவசர நடவடிக்கைகள் பற்றி ஆராய சுற்றுப்புறச் சூழல் நிபுணர்கள் குழு ஒன்றை சவூதி அரேபியாவுக்கு ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் அனுப்பி வைத்திருக்கிறார்.

★ வளைகுடாப் போரில் தொடர்ந்தும் நடுவு நிலைமை வகிக்கப் போவதாக ஈரான் அமெரிக்காவுக்கு உறுதியளித்திருக்கிறது.

அமெரிக்காவுக்கும், ஈரானுக்கும் இடையே ராஜதந்திர உறவுகள் இல்லை.

இதனால்- அமெரிக்க நலன்களை தெஹ்ரானிலுள்ள சுவிஸ் தூதரகம் தான் கவனித்து வருகிறது.

ஈராக்கிய விமானங்கள் ஈரானில் தரை இறங்கியதைத் தொடர்ந்து அமெரிக்கா தனது நிலையை சுவிஸ் தூதர் மூலம் ஈரானுக்குத் தெரியப்படுத்தியது. அப்போதே தனது நடுவு நிலைமைப் போக்கை ஈரான் வலியுறுத்தியது.

★ ஈராக் தொடர்ந்து நடத்தி வரும் 'ஸ்கட்' ஏவுகணைத் தாக்குதல் காரணமாக, சவூதி அரேபியாவில் உள்ள ஹோட்டல்களில் வேலை செய்யும் வெளிநாட்டுத் தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைந்து வருவதாக அறிவிக்கப்படுகிறது.

அச்சம் காரணமாக வெளிநாட்டவர்கள் வேலைக்குப் போவதில்லை என்றும், அதனால் ஹோட்டல் நிர்வாகங்கள் தரமான சேவைகளை வழங்க முடியாமல் சில ஏற்பட்டு இருப்பதாகவும் பி.பி.சி வானொலி தெரிவித்தது.

★ வளைகுடாப் போருக்கு எதிரான ஆர்ப்பாட்டப் பேரணி ஜேர்மனியின் தலைநகர் பொன்னில் சனி இடம்பெற்றது. அதில் இரண்டு லட்சம் பேர் கலந்து கொண்டனர்.

★ ஈராக்குக்கு எதிரான யுத்தத்தில் ஈடுபட்டுள்ள நாடுகளின் நலன்களுக்கு எதிராக பயங்கரவாத நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி உயிர்த்தியாகிகள் 'தியாகிகள்' ஆகப் பிரகடனப்படுத்தப்படுவர்.

இப்படி ஜனாதிபதி சதாம் ஹுசேன் ஆணை பிறப்பித்திருப்பதாக பக்தாத் வானொலி அறிவித்தது.

★ பலஸ்தீனப் பிரச்சினையுடன் தொடர்புபடுத்தப்படாத எந்த சமரச யோசனையையும் எவரிடமிருந்தும் ஏற்றுக் கொள்ளத் தயார் இல்லை என்று ஈராக் அரசு மீண்டும் அறிவித்துள்ளது. ஜனாதிபதி சதாம் ஹுசேனை மேற்கோள் காட்டி பக்தாத் வானொலி இந்த செய்தியை வெளியிட்டது.

★ வளைகுடாப் போரை நடத்துவதற்காக ஆயிரத்து 800 கோடி டொலரை சவூதி அரேபியா வழங்க முன்வந்திருப்பதாக அமெரிக்கா நேற்று அறிவித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ. நா. மீது கடும் கண்டனம் ஈராக் அமைச்சர் கூறுகிறார்

ஈராக் மீது கொலைகாரக் கூட்டம் போர் தொடுக்க ஐ. நா. துணை போனதாக ஈராக் வெளியுறவு அமைச்சர் தாரிக் அஸீஸ் நேற்று ஐ. நாவைக் கண்டித்தார்.

குவைத்தில் இருந்து இயங்கும் 'யுத்தங்களின் தாய்' வானொலியில் தாரிக் அஸீஸ் பேசுகையில் இக்கண்டனத்தை வெளியிட்டார்.

லஞ்சம், பிளாக்மெயில்' ஆகிய நிர்ப்பந்தங்கள் காரணமாகவே ஈராக்மீது போர் தொடுக்க ஐ. நா. பாதுகாப்புச் சபை அனுமதி வழங்கியதாக குற்றஞ்சாட்டிய தாரிக் அஸீஸ் பொதுச் செயலாளர் பெரஸ் டி குயிலரையும் தனிப்பட்ட ரீதியில் காரசாரமாகக் கண்டித்தார்.

## எண்ணெய்ப் படிவில் தீ!

வளைகுடா கடலில் பரவி வரும் மசகு எண்ணெய்ப் படிவின் ஒரு பகுதி தீப்பிடித்துக் கொண்டதாகவும், அதில் இருந்து எழும் புகைமண்டலம் ஈரான் நோக்கி நகருவதாகவும் அறிவிக்கப்பட்டது.

## குவைத் எண்ணெய்க் கிணறு அழிக்க அமெரிக்கா முடிவு?

குவைத்தில் இருந்து வளைகுடாவுக்குச் செல்லும் எண்ணெய்க் கசிவுகளைக் கட்டுப்படுத்த எண்ணெய்க் கிணறுகளை லேசர்கதிர் குண்டுகளால் தாக்கி அழிப்பதற்கு அமெரிக்கத் தலைமையிலான பன்னாட்டுப் படைகள் ஆராய்ந்து வருவதாக செய்திகள் தெரிவித்தன.

இதற்கிடையில் குவைத்தில் உள்ள எண்ணெய்க் கிணறுகளில் இருந்து மசகு எண்ணெய்யை வளைகுடாக் கடலில் ஈராக் இறைத்துக் கொண்டிருப்பதாக சவூதி அரேபிய அரசு நேற்று உத்தியோகபூர்வமாகக் குற்றஞ்சாட்டியது.

## எதிரிகள் எரிக்கப்படுவராம்!

தனது முழு விமானப் படைப் பலத்தையும் இன்னும் பயன்படுத்தவில்லை என்று ஈராக் நேற்று அறிவித்தது.

முழு அளவிலான யுத்தத்தில் ஈராக் ஈடுபட ஆரம்பித்தவுடன், அன்னியத் துருப்புகள் எரிக்கப்படுவர் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## மரணதண்டனை உத்தரவு?

ஈராக்கில் இருந்து தப்பிச் செல்ல முயலும் ஈராக்கிய பிரஜைகளுக்கு மரணதண்டனை விதிக்கும் உத்தரவை ஜனாதிபதி சதாம் ஹுசேன் பிறப்பித்திருப்பதாக எகிப்து நாளிதழ் ஒன்று நேற்று செய்தி வெளியிட்டது.

## தொடர்ந்து 6 மணி நேரம் பஸ்ரா மீது குண்டு வீச்சு!

ஈராக் துறைமுக நகரான பஸ்ரா மீது கடந்த சனிக்கிழமை இரவு பன்னாட்டுப் போர் விமானங்கள் தொடர்ந்து 6 மணித்தியாலங்களாக குண்டு மற்றும் ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தியதாகவும்–

அதனால் ஏற்பட்ட சத்தங்கள் அயல் நாடான ஈரானுக்கும் கேட்டதாகவும் ஈரானின் 'இர்னா' செய்தி ஸ்தாபனம் நேற்று அறிவித்தது.

## ஈரான் சமரச யோசனை

வளைகுடா போரை முடிவுக்கு கொண்டு வருவதற்காக ஐந்து அம்ச சமரச யோசனை ஒன்றை ஈரான் நேற்று வெளியிட்டது.

★ உடனடியாக யுத்த நிறுத்தம் கொண்டுவரப்படவேண்டும்.

★ குவைத்தில் இருந்து ஈராக் படைகளும் வளைகுடாவில் இருந்து அந்நியப் படைகளும் வெளியேற வேண்டும்.

★ அதனைத் தொடர்ந்து வளைகுடாவில் இஸ்லாமிய நாடுகளின் படைகள் நிறுத்தப்படும்.

★ ஈராக் மீதான ஐ. நா. வின் பொருளாதாரத் தடை அகற்றப்பட வேண்டும்.

★ பலஸ்தீனப் பிரச்சினைக்குத் தீர்வு காண இஸ்லாமிய நாடுகள் கூட்டாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த ஐந்து விடயங்களே ஈரானின் சமரச யோசனையில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

## புதுடில்லியிலும் 'சண்டை'!

புதுடில்லி ஆஸிபாபாத் நகரில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போது இந்து—முஸ்லிம்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலில் ஐந்து பேர் உயிரிழந்தனர்.

ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்த முஸ்லிம்கள் அமெரிக்க அதிபர் புஷ்ஷின் கொடும்பாவியை எரித்தனர். அமனைத் தொடர்ந்து இரு தரப்பினரும் மோதிக்கொண்டனர்.

★ இரண்டாம் உலக மகா யுத்தங்களுக்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட பிரமாண்டமான விமானத் தாக்குதல்களால் ஈராக்கியப் படைகள் முடமாக்கப்படவில்லை என்று யுத்த நிபுணர்கள் கருதுகின்றனர். இதுவரை 20 ஆயிரத்துக்கு அதிகமான விமானத் தாக்குதல்களை பன்னாட்டுப் போர் விமானங்கள் குவைத், ஈராக் இராணுவ நிலையங்கள் மீது மேற்கொண்டுள்ளன.


**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி**

**ஆண்டு - 12 (கலைப்பிரிவு)**

**அனுமதி 1992 (பிரிவு)**

மேற்படி வகுப்பில் இன்னும் குறிப்பிட்ட இடங்கள் மட்டும் நிரப்பப்படவேண்டியுள்ளன. சேர விரும்புவோர் 06 - 02 - 1991 க்கு முன்னர் அதிபருடன் தொடர்பு கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர். கற்பிக்கப்படும் பாடங்கள் தமிழ், இந்து நாகரிகம், இந்துசமயம், பொருளாதாரம்.

அதிபர்,

(சி-5697) யா / மத்திய கல்லூரி.


இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 28 - 1 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இக்காலத்தில் இப்படியும்!

யாழ்ப்பாணம், ஜன. 28

இந்தக் காலத்திலும் இப்படியா என்று ஆச்சரியப்படாதீர்கள்!

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள சில பின்தங்கிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் இன்னமும் தங்கள் திருமணங்களைப் பதிவு செய்யவில்லை. தமது பிள்ளைகளின் பிறப்புகளைத் தானும் பதியவும் இல்லை.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தின் அனுசரணையுடன் சனசமூக நிலையங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆய்வு - மதிப்பீடுகள் மூலம் இந்த நம்பக் கஷ்டமாகவுள்ள தரவுகள் கிடைத்துள்ளன.

சுழிபுரம் பகுதியில் உள்ள ஒரு பின்தங்கிய கிராமத்தில் பூர்த்தி செய்யப்பட்ட மதிப்பீடுகளில் இருந்து —

அங்குள்ள 58 குடும்பங்களைச் சேர்ந்த பலர் இன்னும் திருமணப் பதிவு செய்யவில்லை என்பது கண்டறியப்பட்டுள்ளது.

அவர்கள் தமது பிள்ளைகளின் பிறப்புகளையும் பதியவில்லை.

நடமாடும் சேவை மூலம் சம்பந்தப்பட்ட மக்களுக்குரிய திருமணப் பதிவுகளையும், பிறப்புப் பதிவுகளையும் மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. க. டிவகலாலா செய்து வருகிறார்.

## பரீட்சையை நடத்த வற்புறுத்து

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் ஜீ. சி. ஈ. உயர்தர பரீட்சையை விரைவில் நடத்துமாறு யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் கல்வி அமைச்சிடம் கேட்டுள்ளார்.

ஜீ. சி. ஈ. உயர்தர பரீட்சையை நடத்தாது காலம் தாழ்த்தினால், பல்கலைக் கழகக் கல்வி ஆண்டு வீணாகி விடும் என்றும் —

எனவே இயன்றளவு விரைவில் உயர்தரப் பரீட்சையை நடத்த வேண்டும் என்றும் —

துணைவேந்தர்பேராசிரியர் அ. துரைராசா கல்வி அமைச்சுக்கு அனுப்பிய கடிதத்தில் கேட்டுள்ளார்.

இதே கோரிக்கையை பல்கலைக் கழக மூதவையும் விடுத்துள்ளது. (ஆ-5)

## ஓய்வூதியர் கூட்டம்

நல்லூர்த் தொகுதி ஓய்வூதியர் நலன்புரிச் சங்கத்தின் ஒன்பதாவது ஆண்டுப் பொதுக் கூட்டம் நாளைய தினம் காலை 9.30 மணிக்கு திருநெல்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

ஓய்வூதியம் பெற புதிதாக விண்ணப்பித்தவர்களும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## கைது

தென்மராட்சி, ஜன. 28

தென் தமிழீழ மக்களுக்கு நிதி சேகரிப்பதாக மோசடி செய்த நான்கு பேர் கொடிகாமம் விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தாம் பல்கலைக்கழக மாணவர்கள் எனவும், தென் தமிழீழத்தில் அல்லலுறும் மக்களுக்கு நிதி சேகரிப்பதாகவும் கூறி இவர்கள் வரணிப் பகுதியில் பல இடங்களில் நிதி சேகரித்ததாக அறியப்படுகிறது. (அ-117)

## நியமனம்

யாழ்ப்பாணம், ஜன. 28

மானிப்பாய் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி எஸ். கல்யாணசுந்தரேசன் இலங்கை கல்விநிர்வாகசேவைக்கு பதவி உயர்த்தப்பட்டு யாழ்ப்பாணம் கோட்டக் கல்வி அதிகாரிகளில் ஒருவராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

# பெப்ரவரி 6 முதல் முதலாம் தவணை!

யாழ்ப்பாணம், ஜன. 28

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் எதிர்வரும் பெப்ரவரி 6 ஆம் திகதி முதல் முதலாம் தவணை ஆரம்பமாகின்றது.

முதலாம் தவணையின் போது பாடசாலைகள் முன்னர் போல வாரத்தில் 5 நாட்கள் நடைபெறும்.

ஆயினும் இழந்த நாட்களை ஈடு செய்வதற்காக சனிக்கிழமைகளிலும் பாடசாலையை நடத்த பாடசாலை அதிபர்கள் விரும்பினால் கல்வித்திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு அதற்கான அனுமதியை பெற்று, பாடசாலையை நடத்தலாம் —இவ்வாறு கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (உ-5)

# ஆறு மாத உணவு அரசிடம் கையிருப்பு

கொழும்பு, ஜன. 28

ஆறு மாதங்களுக்குத் தேவையான உணவுப் பொருள்கள் அரசாங்கத்திடம் கையிருப்பில் உள்ளன. எனவே வளைகுடா யுத்தம் எம்மைப் பாதிக்காது.

எந்த ஒரு பொருளும் அதிக விலைக்கு விற்க அனுமதிக்கப்படமாட்டாது. தனியார் இறக்குமதி செய்யும் அரிசியைக்கூட அரசு நிர்ணயிக்கும் விலையிலேயே வியாபாரிகள் விற்கவேண்டும்.

இவ்வாறு உணவு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. மல்லிமாராய்ச்சி நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அத்தியாவசியப் பொருள்களை பதுக்கும், அல்லது அவற்றைக் கூடுதல் விலைக்கு விற்கும் வியாபாரிகளின் பொருள்கள் பறிமுதல் செய்யப்படும்—

அவ்வாறு பறிமுதல் செய்யப்படும் பொருள்கள் கூட்டுறவுக் கடைகள் மூலம் விநியோகிக்கப்படும்— என்றும் திரு. மல்லிமாராய்ச்சி கடந்த வெள்ளிக்கிழமை சபையில் பேசுகையில் தெரிவித்தார். (அ)

# நன்றி தெரிவிக்கிறார் கல்விப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், ஜன. 28

மிகவும் இக்கட்டான காலகட்டத்திலும் மாணவர்களது கல்வியை கருத்திற் கொண்டு, லீவு எடுக்காமல் வாரத்தில் 6 நாட்கள் கடமையாற்றி, விசேட குறுங்கால பாடத்திட்டத்தைப் பூர்த்தி செய்து, அவர்களை வகுப்பேற்றத்திற்குத் தகுதி பெறச்செய்ததற்காக குடாநாட்டின் சகல ஆசிரியர்களுக்கும், அதிபர்கள் கல்வி அதிகாரிகள் அனைவருக்கும் எனது நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவிக்கிறேன்.

–இவ்வாறு வடபிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் தெரிவித்தார். (உ-5)

# நடுங்கும் குளிரில் அரிசி வாங்கக் கியூ!

யாழ்ப்பாணம், ஜன. 28

இரண்டாவது உலக யுத்தத்தின்போதும் யாழ்ப்பாணத்து மக்கள் உணவுக்கு இவ்வளவுக்கு அடிபட்டது இடையாது. ஆனால் இலங்கை அரசாங்கம் நடத்தும் யுத்தத்தில் அவர்கள் உணவுக்கு பஞ்சாய்ப் பறக்கிறார்கள். இது வெறும் கற்பனை கதையல்ல.

யாழ்ப்பாணம் நகரத்தில், ஆனைப்பந்தியில், நடுங்கும் குளிரில் நேற்று இரவு 9 மணியில் இருந்து பெரும் மக்கள் கூட்டம், கூட்டுறவுச் சங்கக் கிளையின் முன்னே "கியூ" கட்டி காத்து நின்றது. அந்தக் காட்சி ஒன்றே யாழ்ப்பாண மக்களின் பட்டினிக் கோலத்தை பகிரங்கப்படுத்தப் போதுமானது.

சந்தையில் அரிசி இல்லை. கள்ளச் சந்தையில் யானை விலை. அதனால் பல வீடுகளில் பல நாட்களுக்கு அடுப்புகள் எரிவதில்லை.

இன்று திங்கட்கிழமை நான்காம் கட்ட நிவாரணத்துக்கு அரிசியும் வழங்கப்படுகிறது. அதனை முந்திக்கொண்டு பெற்றுவிட வேண்டும் என்பதற்காக நேற்று இரவு 9 மணியில் இருந்தே ஆண்களும், பெண்களும், சிறுவர்களுமாகப் பெரும் கூட்டம் கூட்டுறவுக் கடையில் கூடிவிட்டது. நிவாரணத்துக்கு வழங்கப்படும் உணவுப்பொருள் மட்டும்தான் பலருக்கு இரண்டு மூன்று நாட்களுக்கு ஒருமுறை வயிற்றை நிரப்புகிறது.

கூட்டுறவுச் சங்கக் கடையில் மட்டும் அல்ல வர்த்தக சங்கம் நிர்ணயித்த கட்டுப்பாட்டு பொருள்களை வாங்குவதற்கும் மக்கள் தனியார் கடைகள் முன்பாகவும் அரிசி ஆலை சொந்தக்காரர்கள் வீடுகள் முன்பாகவும் பனியில் நடுங்கியவாறு இரவிரவாக கியூவில் தவம் கிடக்கிறார்கள்!

இதுதான் இன்றைய யாழ்ப்பாணத்து உணவு நிலை!


## மரண அறிவித்தல்

### செல்லையா இராசம்மா

வண்ணார்பண்ணை இல. 13, அரசடி லேன் தட்டாதெருவைச் சேர்ந்த செல்லையா இராசம்மா அவர்கள் 27-1-1991 ஞாயிறு இரவு இறைவனடி எய்தினார். அன்னார் காலஞ்சென்ற செல்லையா (குட்டிப்பிள்ளை) அவர்களின் மனைவியும், செ. மாணிக்கவாசகர், செ. கணபதிப்பிள்ளை, ஆ. சரஸ்வதி ஆகியோரின் தாயாரும், கு. கனகம்மாவின் சிறிய தாயாருமாவார். ஈமக்கிரியைகள் 28-1-1991 இன்று 2 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பையன்மணல் மயானத்துக்கு தகனத்துக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் ஏற்றுக்கொள்ளவும்.

13, அரசடி லேன், வண்ணார்பண்ணை.

தகவல்: செ. கணபதிப்பிள்ளை குடும்பத்தினர்.

(15406)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org